உ

சிவமயம்

ஐம்பத்தோராவது

# அகஸ்திய மகாமுனிவர்

# ஞானம்-30

திருவிருத்தம்

மெய்ஞ்ஞானகுருபாதப் பூசைபண்ணு
    வித்தைதந்தசற்குருவை நிதமும்போற்று
கையாறமனமாற ஞானஞ்சொல்லு
    காயமாங்குருபத்தைக் கருதிப்பாரு
வையமெல்லாங்கொண்டாடக் கருதிப்பாரு
    மதிகெட்டுவிளாதே மகிழ்ந்திடாதே
பொய்யாதவுபதேச குருவைப்போற்றி
    புகழாகப்பணிகொண்டு வருஷக்காரே. 1

கார்த்தாக்காளெழுத்து வழியுஞ்சொல்வார்
    கருச்சொல்வார்குருச் சொல்வார்களங்கமற்று
பார்த்தாக்காற்சித்திமுத்தி யிரண்டுஞ்சொல்வார்
    பரிவாகவாலைமூன் றெழுத்துஞ்சொல்வார்
சேர்த்தாக்காலெட்டோடே யிரண்டுஞ்சொல்வார்
    சிவஞ்சொல்வார்நாலுக்கு மிடமுஞ்சொல்வார்.

பூத்தாக்காலாயிரத்தெட்டி தழின் வாசி
பூங்கமலத்திருவடியைப் பூசைசெய்யே. 2

பூசையென்னமாணிலமே பூசையாகும்
புருவமையத்தொணிகண்டா லதுவேபோது
மாசையென்ன அற்றவிடங் கடந்தஞானம்
அம்பரத்தைத்செய்யதுவே யாசையாகும்
ஓசையெனவாசிவைத்து மூலத்தாணி
வுயர்த்துநின்றசிலம்பொலிவே ஆசையாச்சு
ஊசையென்னபலவகையு முற்றுப்பார்த்தால்
பகட்டாதசொரூபத்தாற் பணியநன்றே. 3

நன்றானரேசகத்தை முன்னேகேளு
நலமானபூரகத்தை வாங்கிக்கொள்ளு
வொன்றானகும்பகத்தை யுற்றுப்பாரு
வுண்மையென்னவிடங்கேளு வுறுதிகேளு
பன்றாகபழகுவதுக் கடிகைகேளு
பதிவுசொன்றல்மூன்றுக்கும் வடிவுகேளு
குன்றானமூன்றுக்குங் குறிகுணங்கள்சொன்றல்
குருவுக்குவுடலாவிபொருள் தத்தம்பண்ணே. 4

பண்ணிநின்றவுடலாகு முயிர்தானாகும்
பகருகின்றபொருளாகு வுற்றாரு
நண்ணிநின்றகுருவாரு பார்த்தாரு
நலமானவகார மாறும்பாரு

கண்ணில்நின் றவொளிபாரு வெளியைப்பாரு
காலடங்கி வாடுகின்ற கருவைப்பாரு
விண்ணில்நின் றபொருள்சொன்ன குருவைப்போற்றி
வேதாந்தஞ்சித்தாந்த மிரண்டும்பாரே. 5

வேதாந்தசித்தாந்த மிரண்டுமென்ன
மேன்மையுள்ளபெரியோர்க்கு மெல்லாமொன்று
நாதாந்தநடனவொளி கண்டோர்க்கு
நானென்றவகம்போச்சு யெல்லாம்போச்சு
போதாந்தம்பொக்கிஷமாம் வாமபூசை
பூசித்துக்கும்பித்து வுள்ளேரேசி
சிதாந்தவெளியெழும் நாதங்கேட்கும்
கிருபைதருமுனைற்றிய மனத்தைக்கட்டே. 6

மனந்தானேபுத்தியாங் காரஞ்சித்தம்
மதியிரவிடண்டபிண்ட மானவாறும்
மனந்தானேசத்திசிவ மாய்கைஞானம்
வாசிபார்கேசிபா பிரமம்யாவும்
மனந்தானேநாதவிந்து அருபரூபம்
வழிகனல்விண்புனல் பண்புனல்மண்ணனவாறு[ம்
மனந்தானேவுதிக்குமிட மொடுங்குமிடமிரண்டும்
வகைசொல்லுஞ்சற்குருவை வணங்கிகேளே. 7

கேளப்பாவங்கென்று வுள்ளேரேசி
கொடியாகசிங்கென்று வுள்ளேபூசி

ஆளப்பா அங்கென்று வுள்ளே கும்பி
ஐம்-ஓம்-சிம்யமமென்று தியானஞ்செய்வாய்
சூளப்பா சுழிமுனை கண் ணொளியையேற்ற
சொல்லுகிறேன் அம்-உம்-சிம்-வம்-ஓமென்று
வாளப்பா-ஓம்-ஐயுங்-கிலியுங்-சவ்வுங்-வாசி
வாலையாமும்பறையே சிவாவென்றேனே. 8

என்னவே ரேசகந்தான் மூப்பத்திரண்டு
யியலான பூரகந்தான் பதினாறு
முன்னவே கும்பகமே யறுபத்துநாலு
முயர்ந்துநின்றபிராணயங் குருசொற்கேட்டு
பின்னின்றதகரூடு காரணையாறு
பிலமறிந்து சையோக நிலையைப்பற்று
கண்ணில்நின்றபிடமறிந்து காமபூசை
கருவான சிவயோகங் காணலாச்சே. 9

ஆமென்றும்ஓமென்றும் வங்-யங்-ஓம்-ய-வ-சி-ம-ந-
மைங்கெழுத்தைமாறிவுச்சரிக்கவேணும் [வென்று
வாமென்றயிடைகலையில் சிங்-வங்-யங்
நங்-மங்-ஓம்-ந-ம-ய-வ-சி-யென்று
வளமையுடன் சிகாரமதை யறியவேணுந்
தாமென்றசுழிமுனைக்கு ஓம்-மங்-நங்-யங்-வங்-சி
ஓம்-சி-வ-ய-ந-ம-வென்று [ங்
சூட்சயமாய்க்காரத்தை யறியவேணும்

தாமென்றமவுனத்தால் தியானஞ்செய்து
சதாசிவமாஞ்சுழிமுனையி லொளியைப்பாரே. 10

பார்க்கையிலே பவளவொளிபச்சைநீலம்
பருவானபொன்பசுமை வெண்மையத்தும்
சேர்க்கையிலேசூரிய னுதயம்போலை
செகசோதிபூரணத்தின் காந்திதானும்
ஆர்க்கையிலேகொடுத்தபொருள் வாங்குமாப்போல்
ஐந்துருவுமொன்றான வடியேதானுங்
கார்ப்பதுதான் திருவடியே சரணமென்று
காத்தவர்க்குத்தீங்கில்லை கருணைதானே. 11

கருணைதருமக்கினியா தித்தன்சந்திரன்
கலந்துதான் றோய்நின்றது பூரணமேயாகும்
பொருள்நயமாயறிடவனே புண்ணியவானும்
புகழ்சொன்னசற்குருவே யாசானுக்கும்
அருள்கிரணசோதியதா யுதிக்குமேலே
வாயிரத்தெட்டிதழ்மேலே யமிர்தசர்ப்பந்
திருவறிந்துவுண்டவனே சிவயோகியாகுஞ்
சிவசிவாகாலறிந்தோன் சித்தனாமே. 12

சாகாதகாலைகன்றாய காணவேணும்
தணல்வேகாதலையறிந்து கூடவேணும்
போகாதபுனலறிந்து வுண்ணவேணும்
பொருளறிந்தசற்குருவை போற்றவேணும்

வாகாகமூன்றறையுந் தன்னுக்குள்ளே
வகைதெரியலட்சியத்தை வணங்கிக்கேளு
ஆகாதுவொன்றுமில்லை யெல்லாமாகும்
அதைதெரியமிலாப்பொருளாகுஞ் சகலசித்த. 13

சித்தென்னசிற்றின்பம் பேரின்பமென்ன
செல்காலம்நிகழ்காலம் வருங்காலமென்ன
சித்தென்னசித்திவுட வானந்தமென்ன
சடமென்னபொருளென்ன வுயிர்தானென்ன
வித்தென்னமாமென்ன வேர்தானென்ன
வெள்ளியென்ன தங்கமென்ன லோகமென்ன
பத்தென்னவெட்டென்ன யிரண்டுமென்ன
பரமரகசியமான வித்தைக்கேட்டே. 14

விந்துகட்டசுழிமுனைக்கண் ணொளியைப்பாரு
வழிரேகையைப்பாரு சுழியைப்பாரு
அந்தவட்டத்தோங்கார மதனைப்பாரு
ஐந்துபஞ்சாட் சரத்தைப்பாரு
விந்துவிட்டுப்போகாதே விந்தைதக்கட்டு
விதானையாய்நாமுகத்தி லிருந்துபாரு
விந்தைவிட்டால்யோகிகட்குச் சலனம்விந்து
விடாமலேவேதாந்தக் கயிற்றிற்கட்டே. 15

கட்டுவதுமூன் றூடே மறந்தைச்சேரு
கலந்தெட்டுந்தன்னோடே பிரவாடைச்சேரு

ஒட்டுவது சத்துடனே யொன்றைச்சேரு
வுறுதியாய்ச்சேர்ந்தபின்பு வொக்கச்சேரு
மூட்டுவது துலாசந்தா னடங்கிற்றுதேல்
மூனையோடுசுழியாணி யாதாரந்தானும்
சட்டமுடன்லட்சதிசைகள் நன்றாய்க்கேளு
சாரமரிபூரணநூல் தன்னைப்பாரே. 16

நூல்பாருகொங்கணவர் கடைக்காண்டத்தின்
நுணுக்கமெல்லாமதிற்றோணும் பூசைதீட்சை
பால்சினியமுக்கோண்கற்கண்டு வைத்துமாகும்
பால்திரட்டியுண்டுருசி போலேகாணும்
மூலகுருமந்திரமு மதிர்தத்தன்னில்
மூட்டிஞர்ந்தியாயவகை யெல்லாஞ்சொன்னார்
கால்பாருதலைபாரு புனைப்பாரு
கண்காதுமூக்கினதுவாய்க் கண்டவாறே. 17

கண்டத்தில்நின்றசித் தினையப்பாரு
கண்புருவத்திடைவெளியி லொளியைப்பாரு
அண்டத்தில்வெளிதானும் நடுவேநின்று
அங்குமிங்குமெங்குநின்ற வடவைப்பாரு
சண்டமாருதம்போன்ற காலினாலே
தட்டிவிடுமகாஅஸ் வலகனைப்பற்றி
தண்டத்தின்முனைபாரு குண்டலியைப்பாரு
சுத்தமானமூலவா தாரம்பாரே. 18

ஆதாரமூலவட்டத் தம்பம்பாரு
அறிமுகவனட்சரத்தைக் கண்டுதேறு
வேதாவிமாலுடைய யெழுத்தைக்கண்டால்
வெட்டவெளியாங்காரக் கம்பந்தானும்
சூதாகமானிடற்கு யென்றும்வாசிச்
சூட்சமா-யங்-வங்-கென்றுந்தியாணி
பாதாரமேலெதிலும் அங்கென்றாறு
பதியிலேவங்கங்கே யெழுத்தைகாட்டே. 19

நாட்டப்பாபாழ்வெளியில் பசம்பொன்பச்சை
நாடியிடையின்கலையுஞ் சுழியெனத்து
வோட்டப்பாநந்திகம்பத் தொளியைப்பாரு
ஓங்காரமூங்கோண சிங்-வங்-கென்று
ஈட்டப்பா-யம்-மம்-மென்றெண்ணி
யியங்குகின்றமூலத்தின் படியைகாட்டி
ஆட்டப்பாவைங்கோண மேலேவட்டம்
அதன்மேலேவொளிசுழி யெழுத்தைமூட்டே. 20

மூட்டியேவாசிவைத்து பிராணமஞ்செய்ய
மூலகணபதியும் வல்லபையுஞ்சித்தி
சூட்டியேயுத்திய மூலங்கண்டாற்
சொல்லவென்னசகலசித்து மதின்மேற்பாரு
பூட்டியேயிருதிவப்பா சுவாதிஷ்டானம்
பொன்னிறமாம்நாற்கோண மிதழாருக்கும்

தாஷ்டிகமாய்வாசிவைத்து ஓம்-நட் டென்று
சாதகமாய்ப்பிராணாயத் தாக்கநன்றே. 21

நன்றானநான்முகனுஞ் சரஸ்வதியுங்காணும்
நாடோறுஞ்சந்துஷ்டி நினைக்கலாகும்
னன்றானும்நடமெத்த வாலைபூசை
வந்திசந்திவுச்சியிலு மடைவாகச்செய்து
ஒன்றானபிரமநிறம் பொன்னதாகும்
ஓங்காரேகாருவல்லைபுத்தார் காணார்மாண்பார்
மன்றானமணிபூரகம் பிறைபோல்நிற்கும்
விட்டத்தின் பத்திபத்திதழ்காண மாயனாமே.

மாயனாம்பூரகந்தான் மயங்குவானை
ராமச்சீதாலட்சுமியு மானும்பாரு
ஆயனும்பச்சைமா கமலமேனி
மாயனோடு அரணைப்போற் காந்தியாகும்
தூயமாம்புரியவட்டம் வாசிதேசி
யுயிர்க்குகடாந்தி ஆலம்பொசிப்பாய்
ஞாயமாம் ஓம்-வம்-மம்-உமாவென்று
நாட்டமாம்பிராணை வரிசையாமே. 23

வாசித்துங்கெணசித்தும் வாலேசெய்தார்
பரிசையாய்நினைத்ததெல்லாஞ் சித்தியாகும்
பத்திமுக்தியாய்மனதில் செபிக்கவேணும

உரிசையாயியுணர்வுபற்று வதற்குமேலே
ருத்திரனார்முக்கோண வட்டமேலே
சரிகையாய்ப்பனிரெண்டு யிதழ்மேனிற்கும்
சத்தாருத்திரிருத்திரனார் தன்னைக்காணே. 24

தன்னைத்தான்காணவே அம்-உம்-ஓம்-ஆம்மென்று
சார்வாகவாசியோடு சேரசியாக்கே
உன்னைத்தானறிவிக்குஞ் சங்காரர்த்தன்
உருக்காட்டுஞ் சுரிகாமம் பசுமைநீலம்
அன்னந்தான் அறுதுமாஞ் சுழிக்கவீடு
வறிவானனிலை வுக்குள் லிங்கம்பீடம்
பின்னைத்தானிதுவன்றி வேறுயுண்டோ
புரிதுசொல்லக்கூடாது சின்மயமாமென்றே. 25

சின்மயத்தின் செயலறிவார் சித்தர் முத்தர்
தேசிகரும்நவமுனிக ரிஷிகளோரும்
பொன்மயத்தின் செயலறிவார் வாசிமுசாரி
விழிராசர்வசியமுதல் யோகிசித்தர்
மின்மயத்தின் விசுத்தியது கோணம்நிறங்கருப்பு
மேல்வட்டமீரெட்டு யிதழுமாகும்
தனமயத்தின் சோபவமா மகேஸ்பரனும்
மகேஸ்பரியானவம்பிகையின் ரூபங்களே. 26

அம்மகையையறிவதற்கு அம்-உம்-வம்-யம்-மென்று
அழுகாணகால்மடக்கி யோகஞ்செய்ய

தம்பிகையாம்பதியின்கோடி யீசன்காந்தி
தாய்காந்தி அருணஜெளி கோடிக்கொம்பரம்
நம்பினபேர்க்கெக்காரு மேழியாசித்தி
நவகோடிகாதாக்கள் தெரிசனையாகும்
உம்பரோடுவிளையாட் டெளனசித்தி
வுயர்ந்துநின் றகாயசித்தி யுறுதியாமே. 27

உறுதியாம்ஆக்கினை சக்ரவட்டம்
உள்ளரண்டிதழாகுங் கருட்புவண்ணம்
சோதியாமாகாயம் மனுக்கிரகத்தோற்றம்
புகழா-இம்-உம்-ஓம்-ஆம்-மென்று
திருவாலெட்சியத்தால் யோகஞ்செய்ய
செய்யவெசதாசிவனுந் தெரிசிப்பார்பார்
அறுதியாமஞ்ஞன் மணியா ளம்மையாஞ்சித்தி
ஆவிரமென்னுமிரவிமதிபோ லொலியாங்காணே

ஒளியதுகாணிரண்டு மொன்றாய்ச்சேருஞ்சேரு
வுற்றுப்பார்புருவத்தி லூணிப்பாரு
அறியாதகாயமப்பா வணந்தவரைமட்டும்
மந்திடந்தான்சகலசித்துக் காதிபீடம்
வெளிகாணசதாசிவந்தான் மின்னல்கோடி
வெளிச்சம்போல்கண் கூசம்பார்க்கப்போகா
வழிகாணமுக்தியினில் துவாதசந்தான்
மகாசொர்க்கமுக்தியுமா மஷ்டசித்தே 29

அஷ்டசித்தாமெட்டெட்டுஞ் சித்தியாகு
மடிமுடியாமிரண்டுக்கும் வழிதானீது
விட்டெழுத்தும்தொட்டெழுத்தும் விடாதெழுத்தும்
வேதாந்தசற்குருவை வணங்கிக்கேளு
சட்டமிட்டவாதார மிம்மட்டமாச்சு
சண்முகமாமாநாக் குருவைக்கேளு
இட்டமுடன்மனவுறுதி சின்மயத்தெல்லெல்லுங்
திருச்சிற்றம்பலம்போற்ற ஞானமுற்றே. 30

திருச்சிற்றம்பலமென்னு முன்னைஞானஞ்
சித்தாந்தமுத்தர்மா தேசிவாசி
அரூபசிற்றம்பலமறிந்தா லகண்டசோதி
அய்யனையுமேப்பானு மங்கேதானும்
பொருள்சிற்றம்பலங்காட்டி புதுமைகாட்டி
புருவமையத்தின்தானிகாட்டி வெளியுங்காட்டி
ஒருசிற்றம்பலங்காட்டி யுயிருங்காட்டி
வொருக்கானுமழியாத பதவிமுற்றே. 31

## அகஸ்தியர் ஞானம்-30

முற்றிற்று.